சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–29.04.2020

## <u>சாதாரணக் கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு, சார்வரி வருடம் சித்திரை மாதம் 16–ஆம் நாள் (ஏப்ரல் திங்கள் 29–ஆம் நாள்:– 29.04.2020) புதன் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் கிருமி நாசினியான ஹைப்போகுளோரைடு சொலுசன் விநியோகிக்கும் பணிக்கு 08.04.2020ம் அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**1. People Chemical Industries, Aundipatti**

Sodium Hypo Chlorite Liquid 1 லிட்டர்– ரூ.**16.00**

GST 18% - ரூ.2.88

**Total – Rs.18.88**

**2. Shri Sathya Dyes and Chemical, Aundipatti**

Sodium Hypo Chlorite Liquid 1 லிட்டர்– ரூ.**16.50**

GST 18% -ரூ.2.97

**Total – Rs.19.47**

**அலுவலகக் குறிப்பு:–**

1. **குறைவான விலைப்புள்ளி அளித்த People Chemical Industries, Aundipatti என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**
2. **மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **01, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் கொரோனா தொற்று நோய் (COVID-19) தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, நகர்வாழ் பொது மக்களின் நலன் கருதி, உழவர் சந்தை மிக குறுகலான இடத்தில் அமைந்துள்ளதால், பொது மக்களுக்கு நோய் தொற்று ஏற்படாமல் தடுப்பு நடவடிக்கையாக மேற்படி உழவர் சந்தையினை தற்காலிகமாக மாற்றி வாரச்சந்தையிலும் மற்றும் கல்யாண மண்டபம் பள்ளி வளாகத்திலும் செயல்பட ஏதுவாக தேவையான உபகரணங்கள் மற்றும் டியூப் லைட்கள் கொண்டு 19 நாட்கள் இயங்க வைத்தமைக்கும், விலைப்புள்ளிதாரர் திரு.கா.வனராஜ் என்பவருக்கு விலைப்புள்ளியின்படி 19 நாட்களுக்கு 12 எண்ணம் அமைத்த செலவு ரூ.10214/–ஐ வழங்கவும், மேற்படி செலவினத்தை 1920–ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **பதிவு செய்யலாம்.**

**தீர்மான எண், நாள்** **02, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **பதிவு செய்யப்பட்டது.**

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் Head works, Filter Bed, Tank Operator மற்றும் Leak பணிகள் போன்றவற்றை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.816, நாள்.04.02.2020 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 01.04.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் – 0.019% மதிப்பீடு விட குறைவு
2. திரு.கே.வனராஜ், பரமத்தேவன்பட்டி – 1.32% மதிப்பீடு விட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–**

**1. மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் 0.019% குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**

**2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1450/12/இ2).**

**தீர்மான எண், நாள்** **03, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.4**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் சங்கிலியார் திடலில் அமைந்துள்ள உழவர் சந்தை மற்றும் பல்வேறு பணிகளின் நிமித்தம் நகராட்சி அலுவலகத்திற்கு வருகை தரும் பொது மக்களுக்கு கொரோனா வைரஸ் (Covid-19) தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு உழவர் சந்தை மற்றும் நகராட்சி அலுவலகத்தின் நுழைவு வாயில் முன்பு முறையே 1000 லிட்டர் மற்றும் 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் ட்ரம், ஸ்டீல் ஸ்டாண்ட் மற்றும் கை கழுவும் சின்க் (Hand Wash Basin) கீழ்க்கண்டவாறு வாங்கி வைத்த வகையில் ஆன செலவு ரூ.104608/–ஐ விலைப்புள்ளிதாரர் திரு.கா.வனராஜ் என்பவருக்கு வழங்கவும் (அரசு கடித எண்.74/JS/(MA)/Finance/Salaries/2020 இன்படி) மேற்படி செலவினத்தை 1920–ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–இன் கீழ் மேற்கொண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டி | 5 எண்ணம் | ரூ.4300/– | 21500.00 |
| 2. | 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டி | 4 எண்ணம் | ரூ.8600/– | 34400.00 |
| 3. | ஸ்டீல் ஸ்டாண்டு | 5 எண்ணம் | ரூ.5600/– | 28000.00 |
| 4. | Hand Wash Basin | 5 எண்ணம் | ரூ.1900/– | 9500.00 |
| 5. | GST | | | 11208.00 |
| **Total** | | | | **104608.00** |

**அலுவலகக் குறிப்பு:–** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண், நாள்** **04, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **பதிவு செய்யப்பட்டது**

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் கொரோனா (Covid-19) வைரஸ் தொற்று நோய் 3வது வார்டு சாமிகுளம் பகுதியில் வசிக்கும் நபர் ஒருவர் பாதிக்கப்பட்டதால், மேற்படி வைரஸ் தொற்று மற்ற பகுதிகளுக்கும் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, சாமிகுளம் பகுதி முழுவதும் கண்காணிப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டதால், சாமிகுளம் பகுதி முழுவதும் தடை அரண் (Baricade) ஏற்படுத்தும் பணி மேற்கொண்டமைக்கு (அனைத்து தெருக்களையும் மரங்கள் கொண்டு அடைத்து தரத் தேவையான உபகரணங்கள் மற்றும் கூலி உட்பட) ஒரு மீட்டருக்கு ரூ.216/– வீதம் 84 மீட்டர் தடை அரண் அமைத்த பணிக்கு விலைப்புள்ளிதாரர் திரு.கா.வனராஜ் என்பவருக்கு ரூ.20321/–ஐ வழங்கவும், மேற்படி செலவினத்தை 1920–ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–இன் கீழ் மேற்கொண்டதையும் (அரசு கடித எண்.74/JS/(MA)/Finance/Salaries/2020, நாள்.01.04.2020இன்படி) மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **பதிவு செய்யலாம்.**

**தீர்மான எண், நாள்** **05, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **பதிவு செய்யப்பட்டது.**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் 2017–2018, 2018–2019 மற்றும் 2019–2020ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகளை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மக்கள் குரல் நாளிதழில் 25.01.2020–ஆம் நாளன்று விளம்பரமாக வெளியிட்டமைக்கு விளம்பர கட்டணமாக சென்னை, M/s.Newsman Associates Limited நிறுவனத்திற்கு ரூ.15750/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1226/2020/இ1)

**தீர்மான எண், நாள்** **06, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சி எல்லைக்குட்ட வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள பாதாள சாக்கடைத் திட்ட சுத்திகரிப்பு நிலையத்தில் இயங்கிவரும் மோட்டார்கள் மற்றும் எலக்ட்ரிக் சாதகங்களில் அவ்வப்போது பழுது ஏற்படுகிறது. மேற்படி மோட்டார்கள் மற்றும் எலக்ட்ரிக் சாதனங்களில் ஏற்படும் பழுதுகளை அவ்வப்போது சரி செய்ய உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை பாதாள சாக்கடை நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1273/2020/இ1)

**தீர்மான எண், நாள்** **07, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள Tube Light மற்றும் Ceiling Fan ஆகியவை பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே பணியாளர்களின் நலன் கருதி புதிதாக Tube Light மற்றும் Ceiling Fan-கள் வாங்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.20,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1298/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **08, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் மின் மோட்டார்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.624, நாள்.08.03.2019–ஆம் தேதி அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியை செய்வதற்கு 13.03.2020–ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **1.தலைமை நீரேற்று நிலையம் 7.5HP Motor Repair Works (2 எண்ணம்)** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.14310/– |
| 2. | திரு.M.கதிரேசன், கதிர் மோட்டார், சின்னமனூர் | ரூ.11950/– |
| **2.அ). குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 5HP Motor Repair Works செய்தல் (1 எண்ணம்)** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.5750/– |
| 2. | திரு.M.கதிரேசன், கதிர் மோட்டார், சின்னமனூர் | ரூ.5450/– |
| **ஆ). குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 30HP Motor Repair works செய்தல் (1 எண்ணம்)** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.23000/– |
| 2. | திரு.M.கதிரேசன், கதிர் மோட்டார், சின்னமனூர் | ரூ.22500/– |
| **இ). குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 15Hp Starter Repair works செய்தல் (1 எண்ணம்)** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.1100/– |
| 2. | திரு.M.கதிரேசன், கதிர் மோட்டார், சின்னமனூர் | ரூ.1000/– |
| **ஈ.குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 15HP Starter Napp மாற்றுதல் (1 எண்ணம்)** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.2100/– |
| 2. | திரு.M.கதிரேசன், கதிர் மோட்டார், சின்னமனூர் | ரூ.2000/– |
| **உ).குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Foot Valve Repair works செய்தல் (1 எண்ணம்)** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.1100/– |
| 2. | திரு.M.கதிரேசன், கதிர் மோட்டார், சின்னமனூர் | ரூ.1100/– |
| **ஊ.குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Starter Control Repair works செய்தல் (1 எண்ணம்)** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.5200/– |
| 2. | திரு.M.கதிரேசன், கதிர் மோட்டார், சின்னமனூர் | ரூ.5000/– |
| **3.அ).மினி பவர் பம்ப் ஏர்கம்ப்பரேசர் மோட்டார் ரிவைண்டிங் Repair works (1 எண்ணம்)** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.3800/– |
| 2. | திரு.M.கதிரேசன், கதிர் மோட்டார், சின்னமனூர் | ரூ.3700/– |
| **ஆ).மினி பவர் பம்ப் 2HP Single Phase Repair Rewinding Works (1 எண்ணம்)** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.2250/– |
| 2. | திரு.M.கதிரேசன், கதிர் மோட்டார், சின்னமனூர் | ரூ.2200/– |

**அலுவலகக் குறிப்பு:–** வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2–இல் காணும் திரு.எம்.கதிரேசன், கதிர் மோட்டார், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், திரு.எம்.கதிரேசன், கதிர் மோட்டார், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6130/2016/இ2)

**தீர்மான எண், நாள்** 09, நாள்.29.04.2020

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 37 தற்காலிக களப்பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளலாம் என அறிவுறுத்தியதற்கிணங்க ஒப்பந்தப்புள்ளி கோரி திரு.ஆர்.பரமானந்தன் என்ற ஒப்பந்தக்காரருக்கு ஓராண்டு காலத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்த நிலையில் 2019–ஆம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரினாலும் சென்ற ஆண்டைவிட கூடுதல் தொகை வழங்க வேண்டும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதமாகும் என்பதால் பொது சுகாதார நலம் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பணியின் அவசர அவசியம் கருதி துப்புரவு அலுவலரின் அறிக்கையில் மேற்படி பணியினை ஓராண்டிற்கு (17.04.2019 முதல் 16.04.2020 வரை) பழைய விலை விகிதத்தில் செயல் முறையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஒப்பந்த நீட்டிப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில் ஏப்ரல் 16.04.2020–ஆம் தேதியுடன் ஒப்பந்தக்காலம் முடிவடைவதால் சின்னமனூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள ஒரு நபருக்கு கொரோனா அறிகுறி காணப்பட்டதை தொடர்ந்து மேலும் கொரோனா தொற்று நகராட்சி பகுதிகளில் தொற்று பரவும் அபாயத்தை தடுக்கும் பொருட்டும், மாநில அரசு 23.03.2020 முதல் தொடர்ந்து ஊரடங்கு அமல்படுத்தியுள்ளதாலும் பொது மக்களின் நலன் மற்றும் அவசர அவசியமாக கொரோனா தொற்று தடுப்பு பணியில் ஈடுபடவேண்டிய அவசர சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே திரு.ஆர்.பரமானந்தன் ஒப்பந்ததாரர் மூலமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

**1. பொது சுகாதார மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி உத்திரவு வழங்கிய திரு.ஆர்.பரமானந்தன்,ஒப்பந்ததாரர் மூலமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0680/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **10, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.27, பள்ளிக்கோட்டைபட்டியில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஒவ்வொரு குடியிருப்பு வீடுகளுக்கும் பகிர்மானக் குழாய்கள் பதித்து தனி தனியே குடிநீர் குழாய் இணைப்பு வழங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.6.00 இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

**1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4230/2019/இ1)**

**தீர்மான எண், நாள்** **11, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் 2017–2018, 2018–2019 மற்றும் 2019–2020–ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகளை தமிழக அரசின் முத்திரை பதிக்கும் மூன்றாண்டு சாதனைகளாக தினமலர் நாளிதழில் 26.03.2020–ஆம் நாளன்று வெளியிட்டமைக்கு விளம்பர கட்டணம் தொகை ரூ.21000/– மதுரை, தினமலர் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1226/2020/இ1)

**தீர்மான எண், நாள்** **12, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.13**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அலுவலக ந.க.எண்.3336/ஜே2/2020–17, நாள்.23.04.2020–இல் கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி சின்னமனூர் நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று தடுப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் தேவையான அளவு இருப்பில் வைத்திருக்க அறிவுறுத்தியதை தொடர்ந்து, கொரோனா தடுப்பு பணியில் ஈடுபடும் களப்பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு, ஒரு முறை பயன்படுத்தப்படும் முக கவசம் (Disposable Mask), கையுறைகள் (Disposable Gloves), முழு உடற் பாதுகாப்பு கவசம் (PPE) போன்றவற்றை தேவையான அளவு வாங்கவும் மற்றும் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் வகையில் அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிக்க தேவையான லைசால் (Lysol) மற்றும் சோடியம் ஹைப்போகுளோரைடு வாங்க ஆகும் மொத்த செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**
**2. மேற்கண்ண் பணியின் அவசர அவசிசிம் கருதி முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **13, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் விநியோகிக்கும் பணிக்கு 29.04.2020–ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான குறுகிய கால விலைப்புள்ளி மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **1. Reliant Global Green Energy & CO, Coimbatore** | | |
| ஒரு முறை பயன்படுத்தும் முக கவசம் | 1 எண்ணம் | ரூ.15.22 |
| ஒரு முறை பயன்படுத்தும் கையுறை | 1 பெட்டி | ரூ.918.40 |
| ஒரு முறை பயன்படுத்தும் (PPE Kit) | 1 எண்ணம் | ரூ.454.65 |
| சோடியம் ஹைப்போகுளோரைடு | 1 லிட்டர் | ரூ.23.01 |
| லைசால் | 1 லிட்டர் | ரூ.293.82 |
| **2. Shine Traders, Coimbatore** | | |
| 3 Layer mask | 1 Nos | ரூ.15.75 |
| PPE kit Disposal | 1 Nos | ரூ.458.85 |
| Gloves Disposal | 1 Pack | ரூ.929.00 |
| Sodium Hypochlorite | 1 Litter | ரூ.299.72 |
| Lysol | 1 Litter | ரூ.24.78 |
| **3.Radiaant Textile Procass, Erode** | | |
| mask | 1 Nos | ரூ.16.27 |
| PPE kit | 1 Nos | ரூ.462.00 |
| Hypochlorite | 1 Litter | ரூ.25.72 |
| Lysol | 1 Litter | ரூ.312.70 |
| Gloves | 1 Pack | ரூ.929.04 |

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான விலைப்புள்ளி அளித்த M/s.Reliant Global Energy & Co, Coimbatore என்ற நிறவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **14, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது**

*******

**பொருள் எண்.15**

சின்னமனூர் நகராட்சிக்குப் பகுதிகளில் கொரோனா தொற்று தடுப்பு சம்மந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி சமூக இடைவெளி கடைப்பிடிப்பது, அம்மா உணவக இலவச உணவு, பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வீட்டிற்கே சென்று வழங்குவது போன்ற விழிப்புணர்வு வாசகங்களை ஒலி பெருக்கி மூலம் நகராட்சி பகுதிகளில் மேற்கொண்ட வகையில் ஆன செலவினம் ரூ.5000/–த்தை தங்கம் ஆடியோ & லைட் ஹவுஸ், சின்னமனூர் என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **15, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

## பொருள் எண்.16

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான 4வது வார்டு காந்தி நகர் காலனி 7வது தெருவில் 7 தெருக்கள் உள்ளன. குடிநீர் விநியோகம் செய்யும் பொழுது மேற்படி தெருக்களிலும் சீராக குடிநீர் விநியோகம் ஆகவில்லை. இதனால் அப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாவதுடன், அடிக்கடி நகராட்சிக்கு புகார் தெரிவித்த வண்ணம் உள்ளனர். எனவே 7வது தெருவில் வசிக்கும் பொது மக்களுக்கு குடிநீர் சீராக விநியோகம் செய்ய சப்ளையினை இரண்டாக பிரித்து வழங்க வேண்டியுள்ளது. அதற்கு தனியாக குழாய் பதிக்க வேண்டும்.

மேலும் விஸ்வன்குளம் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யும் பொழுது சப்ளை மெயினில், இரண்டு பகுதிகளுக்கு செல்லும் சுமார் 20 வீடுகளுக்கு தண்ணீர் கூடுதலாக பிடிக்கும் நிலை உள்ளன. 20 வீட்டுக்காரர்கள் கூடுதலாக குடிநீர் பிடித்து வீணடிப்பதை மாற்றயிமைக்கும் பொருட்டு புதிதாக பைப்லைன் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி புதிதாக பைப்லைன் அமைக்கவும், மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1314/2020/இ1)

**தீர்மான எண், நாள்** 16, நாள்.29.04.2020

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

*******

## பொருள் எண்.17

சின்னமனூர் நகராட்சிப் பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த மினிபவர் பம்புகளில் சேக் மைதீன் தெரு, மெயின் ரோடு, ஆர்.சி.பள்ளித் தெரு, காளவாசல் தெரு மற்றும் வெள்ளையன் தெருக்களில் அமைக்கப்பட்டிருந்த மோட்டார்கள் பழுதடைந்துவிட்டது. மேலும் விஸ்வன்குளம் மற்றும் கீழப்பூலானந்தபுரம் கழிப்பறைகளில் அமைக்கப்பட்டிருந்த மின் மோட்டார்களும் பழுதடைந்துள்ளதுடன் திரும்ப பழுது நீக்கி உபயோகம் செய்வதற்கு இயலாத நிலையில் உள்ளன.

எனவே மேற்கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மோட்டார்களுக்கு பதிலாக புதிய மோட்டார்கள் வாங்கிப் பொருத்துவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.10 இலட்சத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1380/2020/இ1)

**தீர்மான எண், நாள்** 17, நாள்.29.04.2020

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

*******

**பொருள் எண்.18**

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்களின் கடிதத்தில் சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட கொரோனா தொற்று தொடர்பாக உருவாகும் மருத்துவ கழிவுகளை சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டத்தின் மருத்துவ கழிவுகளை மேலாண்மை 2016–இன்படி வெளியேற்றுவது குறித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, சின்னமனூர் நகராட்சி பகுதியில் சேகரமாகும் மருத்துவ கழிவுகளை தினசரி சேகரித்து முறையாக அப்புறப்படுத்த ராம்கி எனர்ஜி அன்ட் என்விரான்ட்மெண்ட் லிமிடெட், மதுரை என்ற விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ளவாறு மாதாந்திர கட்டணம் ரூ.20000/– தினசரி 15 கிலோவிற்கும் உட்பட்டும், கூடுதலாக சேகரமாகும் மருத்துவ கழிவுகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ள கட்டணம் ரூ.52/– (கிலோ ஒன்றுக்கு) என்ற விகிதத்தில் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **18, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.19**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கி வரும் கீழ்க்காணும் வாகனங்களுக்கு, கீழ்க்காணும் விவரப்படி 2020–2021–ஆம் ஆண்டிற்கான சாலைவரி (Road Tax) செலுத்த உத்தேச மதிப்பீடு தொகை ரூ.21684/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வாகன எண். | வாகன விவரம் | 2019–2020ம் ஆண்டு தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | TN60S2193 | ஜெட்ராடிங் | 13484/– |
| 2 | TN60Z5198 | மார்ஷல் | 2500/– |
| 3 | TN603761 | தண்ணீர் லாரி | 5700/– |
| மொத்தம் | | | **21684/–** |

**அலுவலகக் குறிப்பு:–** **1. அனுமதிக்கலாம்.**

**2. அவசர அவசியம் கருதி மேற்கண்ட வாகனங்களுக்கு சாலைவரி செலுத்துவதற்கு முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **19, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.20**

சின்னமனூர் நகராட்சிக்குப் பகுதிகளில் கொரோனா (Covid-19) நோய் தொற்று பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஏர்கம்ப்ரேசர் மோட்டார் மூலம் மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ள மோட்டாருடன் கூடிய மெஷீன் இயக்குபவர் கூலி உட்பட நாள் ஒன்றுக்கு ரூ.1300/– வீதம் 22 நாட்கள் மேற்கொண்டமைக்கு ரூ.32032/–ஐ விலைப்புள்ளிதாரர் திரு.கா.வனராஜ், சின்னமனூர் என்பவருக்கு வழங்கவும், மேற்படி செலவினத்தை பொது நிதியின் கீழ் வழங்கவும், 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15– இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | பதிவு செய்யலாம். |
| **தீர்மான எண், நாள்** | **20, நாள்.29.04.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

*******

**பொருள் எண்.21**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் பணியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை மற்றும் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மூன்றடுக்கு முக கவசம்–10000 எண்ணம் மற்றும் காய்ச்சல் கண்டறிய பயன்படுத்தப்படும் Non Contact Infrared Thermo Meter-4 எண்ணம் வாங்கும் பணிக்கு ஆகும் செலவினம் ரூ.300000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **21, நாள்.29.04.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

*******

**பொருள் எண்.22**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள **1** முதல் 27 வார்டுகளை GIS Shape File Format-இல் வரைபடம் வரையும் பணிக்கு விலைப்புள்ளி அறிவிப்பு செய்ததில் **16.09.2019**–ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை (வார்டு ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1. | கண்ஸ்ட்ரக்சன் வேல்டு, வடக்கு ரத வீதி, சின்னமனூர் | ரூ.2450/– |
| 2. | ஹைரைஸ் பில்டர்ஸ், பகவதியம்மன் கோவில் தெரு, சின்னமனூர் | ரூ.2730/– |
| 3. | பிர்க் பில்டர்ஸ், மெயின் ரோடு, சின்னமனூர் | ரூ.3000/– |

அலுவலகக் குறிப்பு:– **குறைவான விலைப்புள்ளி கோரியுள்ள வரிசை எண்.1–இல் காணும் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0775/2019/எப்1)**

**தீர்மான எண், நாள்** **22, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.23**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவது தொடர்பான அறிவிப்புகள், ஸ்டிக்கர்ஸ், பேனர்கள் தயார் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/–க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.**

**3. அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2446/2019/எப்1)**

**தீர்மான எண், நாள்** **23, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.24**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவது குறித்த அறிவிப்புகள், ஸ்டிக்கர்ஸ், பேனர்கள் தயார் செய்யும் பணிக்கு 09.08.2019ஆம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர்கள் | விவரம் | எண்ணம் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | கமலி கம்ப்யூட்டர்ஸ் பிரஸ், க.எண்.24, வ.எண்.9, மார்க்கையன் கோட்டை ரோடு, சின்னமனூர் | 1. அறிவிப்பு ஏ4 அளவு<br>2. ஸ்டிக்கர்<br>3. பேனர் 10x15 அளவு<br>4.பேனர் 6x5 அளவு | 1<br>1<br>1<br>1 | ரூ.1.15/-<br>ரூ.3.78/-<br>ரூ.1000/-<br>ரூ.600/- |
| 2. | சூர்யா அச்சகம், முத்தாலம்மன் கோவில் எதிர்புரம் மேல்தளம், எஸ்பிகே ரோடு, சின்னமனூர் | 1. அறிவிப்பு ஏ4 அளவு<br>2. ஸ்டிக்கர்<br>3. பேனர் 10x15 அளவு<br>4.பேனர் 6x5 அளவு | 1<br>1<br>1<br>1 | ரூ.1.40/-<br>ரூ.3.98/-<br>ரூ.1100/-<br>ரூ.690/- |

அலுவலகக் குறிப்பு:- **1. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கோரியுள்ள வரிசை எண்.1-இல்காணும் அச்சகத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
**2. அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2446/2019/எப்1)**

**தீர்மான எண், நாள்** **24, நாள்.29.04.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

*******